ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம்
1 FEB 2023

0(.0569 =7072/22

**By Speed Post**

ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை - 9.
தொலைபேசி: 044-25672169
நிகரி: 044-25675849
இணையதளம் : www.drdpr.tn.gov.in

கடித எண்.3781754/ப.ரா-4(2)/2022-1, நாள் 29.12.2022

அனுப்புநர்
திரு.பெ.இராமு, எம்.ஏ.,
அரசு துணைச் செயலாளர்.

பெறுநர்
மாவட்ட ஆட்சித் தலைவர் / ஊராட்சிகளின் ஆய்வாளர்,
நாமக்கல் மாவட்டம் (இணைப்புடன்).

அய்யா,

பொருள்: பொதுப் பணிகள் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - நாமக்கல் மாவட்டம் - வெண்ணந்தூர் வட்டாரம்- தொட்டியப்பட்டி ஊராட்சி - முனனாள் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் சத்தியமூர்த்தி (திரு) மற்றும் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் மாணிக்கம் (திரு) ஆகியோர் மீது குற்றச்சாட்டு ஏற்படுத்தப்பட்டு விசாரணை அறிக்கை வரப்பெற்றது - வழக்கு தொடர இசைவாணை வழங்குவது குறித்த தெளிவுரைகள் கோரியது - தொடர்பாக.

பார்வை:
1. ஆணையாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை அவர்களின் கடிதம் எண்.732/VC-II/2020-1, நாள் 06.03.2020.
2. காவல் கண்காணிப்பாளர், மேற்கு சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.39/2018/RDP-NK, நாள் 29.08.2022.
3. தங்களின் நே.மு.க. எண் ஊநி3/ 7072/2022, நாள் 19.11.2022.

-----

பார்வையில் காணும் தங்கள் கடிதத்தின் வழியாக நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் வட்டாரம், தொட்டியம்பட்டி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் மீது குற்றச்சாட்டு ஏற்படுத்தப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கு அனுமதி வழங்க உரிய அனுமதி வழங்கும் அதிகாரம் பற்றிய தெளிவுரை வழங்குமாறு பார்வை 3-ல் காணும் கடிதம் வழியாக தங்களால் கேட்டுக் கொள்ளப்பட்டது.

Scanned with ACE Scanner

2. இந்நேர்வில், 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 230-இன்படி தன்னுடைய அலுவல் சார்ந்த பணியை செய்யும்பொழுது தவறிழைத்ததாக ஊராட்சி மன்றத் தலைவர் உட்பட ஊராட்சிகளின் உறுப்பினர்களின் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்படும் பொழுது அரசின் முன் அனுமதியின்றி எந்தவொரு நீதிமன்றமும் அதனை விசாரணைக்கு எடுக்க இயலாது என தெரிவிக்கப்பட்டிருப்பினும், அதன் பின்னர் ஊழல் தடுப்புச் சட்டம், 1988-ஆம் ஆண்டு பிரிவு 17A (i) (as inserted by Central Act 16 of 2018). அறிமுகப்படுத்தப்பட்டதனையடுத்து, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (N) துறையானது தனது அரசாணை (நிலை) எண்.173, நாள் 19.1.2.2018-ன்படி கீழ்க்காணும் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிட்டுள்ளது. (அரசாணை நகல் இணைக்கப்பட்டுள்ளது) அதன் சாராம்சம் பின்வருமாறு:-

" 17 A. (1) No police officer shall conduct any enquiry or inquiry or investigation in to any offence alleged to have been committed by a public servant under this Act, where the alleged offence is relatable to any recommendation made or decision taken by such public servant in discharge of his official functions or duties, without the previous approval.

(a) xxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxx

(b) xxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxx

(c) in the case of any other person, of the authority competent to remove him from his office at the time when the offence was alleged to have been committed:

இதனைத் தொடர்ந்து, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை முதற்கட்ட விசாரணை / விரிவான விசாரணை / வழக்குப் பதிவு செய்தல் ஆகியவற்றில் ஏற்கனவே பின்பற்றப்படும் பழைய நடைமுறைகளில் கீழ்க்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றுமாறு கூறியுள்ளது. அதன் சாராம்சம் பின்வருமாறு:-

" 4. After factual verification as laid down in para 3 above and on admitting the complaints / petitions by the Directorate of Vigilance and Anti-Corruption, where the alleged offence is relatable to any recommendation made or decision taken by such public servant in discharge of his official functions or duties, for the purpose of obtaining previous approval under Section 17A(1) of the Prevention of Corruption Act, 1988, the Directorate of Vigilance and Anti-Corruption shall adopt the following procedure:-

i) where an enquiry or inquiry is proposed against a Group A or Group B Officer, who is or was employed at the time when the offence was alleged to have been committed, the Directorate of Vigilance and Anti-corruption shall forward the

Scanned with ACE Scanner

materials to the authority competent to remove him from his office, through Vigilance Commission.

ii) xxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxx

iii) xxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxx

iv) xxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxx

v) xxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxx

vi) where it is proposed to register a Regular Case for investigation against Public Servants, the Directorate of Vigilance and Anti-Corruption, shall forward the materials, to the authority competent to remove him from his office, through the Vigilance Commission, with a copy marked to the monitoring authority concerned as indicated in para 6 below.

5. The competent authority, on receipt of materials, shall arrive at a conclusion for it to be conveyed, within the time limit prescribed in the second proviso to section 17A(1) of the Prevention of Corruption Act, 1988, directly to the Directorate of Vigilance and Anti-Corruption, with a copy marked to the Secretary to Government / Head of the Department concerned, as the case may be and to the Vigilance Commission."

3. எனவே, மேலே பத்தி 2-ல் கண்டுள்ள தெளிவுரையின்படி தவறிழைக்கும் ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மீது நீதிமன்றம் மூலமாக நடவடிக்கை தொடருவதற்கான அனுமதியினை அவர்களை பணி நீக்கம் செய்யும் அதிகாரம் படைத்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வழங்குவது மட்டுமே பொருத்தமானதாக இருக்கும் என்ற தெளிவுரையினைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு துணைச் செயலாளருக்காக

Scanned with ACE Scanner